கனம் திரு. வெ. ராமையா : சட்டப்படி பெட்டர்மெண்ட் லெவியை நிர்ணயம் செய்வது கஷ்டமாக இருந்தது. அதைக் கொஞ்சம் நடைமுறையில் சாத்தியப்படக்கூடிய முறையில் திருத்தம் செய்யவேண்டுமென்ற அடிப்படையில் திருத்தம் செய்தோம். அந்த அடிப்படையில் பெட்டர்மெண்ட் லெவி போட்டு வசூலிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ரெவின்யூ போர்டும் கீழ் இருக்கும் அதிகாரிகளும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வட ஆற்காடு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்குக் கட்டடங்கள்

* 261 கேள்வி.—**திரு. சி. கோதண்டராம பாகவதர் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லா கலெக்டர் அலுவலகம் மிகவும் பழைய கட்டடமாக இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) அதைப் புதுப்பிக்கும் உத்தேசம் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : அந்தக் கட்டடம் பழைய கட்டடம் மட்டுமல்ல, இடம் போதாத நிலைமையும் இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அந்தக் கட்டடத்தைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்தக் கட்டடத்தை வேறு இடத்தில் அமைப்பதாக உத்தேசமில்லை. ஆனால் அங்கே இடநெருக்கடி இருப்பதை அரசாங்கம் உணர்ந்து அதைக் கொஞ்சம் விஸ்தரிக்கவேண்டுமென்ற முறையில் எஸ்டிமேட் சாங்ஷன் செய்தார்கள். ஆனால் தேசீய நெருக்கடி வந்த பிறகு அதுவும் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்துடன் வேறு தாலூகா இணைப்பு

* 262 கேள்வி.—**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நான்குனேரி தாலூகாவையாவது இராமநாதபுரம் சப்-தாலூகாவையாவது கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்க்க உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால், காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) வினா எழாது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION *RE.* ACQUIREMENT OF BUILDINGS IN THE MANDAPAM CAMP.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, தற்போது சிலோன் சர்க்கார் வசம் இருக்கிற மண்டபம் காம்ப் கட்டடத்தை அவர்கள் விற்றுவிட முயற்சிக்கிறார்கள். அதை வாங்க இந்திய சர்க்கார் முயற்சி எடுத்து பேச்சு வார்த்தைகள் நடத்தியது. அவர்கள் கேட்கிற 20 லட்சம் ரூபாயைக் கொடுப்பதற்கில்லையென்றும், ஏற்கனவே அந்த இடத்தை பற்றிய ஜெண்டில்மேன் அக்ரீமெண்ட் படி திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்கிறார்கள். அவர்கள் தர மறுக்கிறார்கள். ஆகவே, அந்தப் பேச்சு